# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2023.02.23 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## *பிரிவிடல் (திருத்தம்)*

**1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் பிரிவிடற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 50.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், ( "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடற் சட்டத்துக்கான 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவு, பரவேணி நிலகாரயாவை அல்லது கோயில் ஒன்றின் பரவேணி பங்கு ஒன்றில் உள்ள பரவேணி நிலகாரயா ஒருவரிடமிருந்தான உரித்தை பெறுகின்ற எவரேனும் ஆளை முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய பரவேணி பங்கைப் பிரிவிடுவதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான பிரிவிடல் வழக்கொன்றை தொடுப்பதற்கு இயலச் செய்கின்றது.

**வாசகம் 3** : இவ்வாசகம், பிரிவிடப்படவேண்டிய காணியில் அக்கறைகொண்டுள்ள எல்லா ஆட்களுக்கும் அத்தகைய பிரிவிடல் வழக்கு பற்றி அறிய வருவதை இயலச் செய்வதற்கு பதாகையொன்றை வெளிக்காட்டிவைத்தல் மற்றும் ஒலிபெருக்கியொன்றைப் பயன்படுத்துதல் என்ற வகையாக பிரிவிடல் வழக்கு பற்றிய பகிரங்க அறிவித்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றது; இது, நீதிமன்றம், ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணையின் மீது அல்லது எவரேனும் திறத்தவரின் தூண்டுதலின் பேரில் வழக்கிலான தீர்ப்பை அளிப்பதற்காக 73 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் நில அளவையாளருக்கு மேலதிக ஆணைகள் வழங்குவதனை இயலச் செய்கின்றது.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் வாசகம் 3 இனால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், விளக்கத்திற்கான முதலாவது தேதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் இடையீடு செய்கின்ற திறத்தவரொருவருக்கு ஆவணங்களின் நிரல் ஒன்றை கோப்பிடுவதற்கான காலப்பகுதி யொன்றை ஏற்பாடுசெய்வதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 7** : இவ்வாசகம், காணியை காணித் துண்டங்களாகப் பிரிப்பதற்கான ஆணையை, பூர்வாங்க நில அளவையைச்செய்த நில அளவையாளருக்கு அல்லது 73 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிரலில் பெயர் உள்ள எவரேனும் நில அளவையாளருக்கு அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் பதியப்பட்ட இடைக்காலத் தீர்வையினால் ஏதேனும் உரிமை அளிக்கப்பட்டுள்ள எல்லா திறத்தவர்களும் உடன்பட்டுக்கொள்வதன் மீது வேறு எவரேனும் நில அளவையாளருக்கு வழங்குவதனை நீதிமன்றத்துக்கு இயலச்செய்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் 3 ஆம் வாசகத்தினால் முதன்மைச்சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், 36 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் திருப்தியுறாத ஆளொருவருக்கு, அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மேன்முறையீட்டுக்கான அனுமதிக்கான விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவை மாற்றீடு செய்கின்றது.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 45அ என்னும் பிரிவை, 36அ மற்றும் 45அ என்னும் பிரிவுகளுக்கு கவனயீனமாக பிழையான குறிப்பீடொன்றைச் செய்வதில் அப்பிரிவில் இடம்பெற்ற பிழையை நிவர்த்தி செய்வதன்மூலம் திருத்துகின்றது.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் 2 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந் தன்மையினதுமாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் 3 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம், "பரவேணி நிலகாரயா", "பரவேணி பங்கு", "கோயில்" மற்றும் "நம்பிக்கைப்பொறுப்பாளர்" ஆகிய பதங்களுக்கான வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் 2 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையில் "கிராம சேவக அலுவலரின் அறிக்கை" என்னும் தலைப்பைக் கொண்டுள்ள படிவத்தை திருத்துகின்றதுடன் 3 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

ச.வ.ஓ - 68/2021

## 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் பிரிவிடற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிரிவிடல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தில் 2அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்

**2**. (இதனகத்துப்பின்னர், ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடற் சட்டம், அதன் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது; அப் பிரிவு அதன் 2அ என்னும் பிரிவாக பயனுறுதல் வேண்டும் :-

‘‘பரவேணி நிலகாரயா ஒருவரினால் பிரிவிடல் வழக்கு தொடுக்கப்படல்

2அ.(1) பரவேணி நிலகாரயா ஒவ்வொருவரும் அல்லது கோயில் காணி ஒன்றின் பரவேணி பங்கு ஒன்றில் உள்ள பரவேணி நிலகாரயா ஒருவரிடமிருந்தான உரித்தைப் பெறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய பரவேணி பங்கைப் பிரிவிடுவதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான பிரிவிடல் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட பரவேணி நிலகாரயாக்கள் அல்லது பரவேணி பங்கொன்றில் அக்கறை கொண்டுள்ள ஆட்கள் உள்ளவிடத்து, அத்தகைய பரவேணி நிலகாரயாக்கள் அல்லது அத்தகைய ஆட்கள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தொடுக்கப்படும் ஏதேனும் வழக்குக்கு திறத்தவர்களாக ஆக்கப்படலாம்.

(3) (அ) ஐயத்தை தவிர்ப்பதற்காக, பரவேணி பங்கு ஒன்றின் பிரிவிடல் அல்லது விற்பனை (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வலுவுறுத்தப்படற்பாலதான கோயில் ஒன்றின் எவையேனும் உரிமைகளை பாதித்தலாகாது என இத்தால் குறிப்பிடப்படுகின்றது என்பதுடன் கோயிலானது, விடயத்துக்கேற்ப பரவேணி பங்கின் முழுமை தொடர்பில் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் பிரிவிடல் அல்லது விற்பனை எதுவும் இடம்பெறவில்லை என்றாற்போன்று விடயத்துக் கேற்ப அதன் நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது விகாராதிபதியினூடாக அத்தகைய கட்டளைச் சட்டத்தின் கீழான உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(ஆ) (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச் சட்டத்தின் கீழ் வலுவுறுத்தப் படற்பாலதான கோயில் ஒன்றின் ஏதேனும் உரிமை, அத்தகைய கோயிலின் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் அல்லது விகாராதிபதியொருவர் இப்பிரி வின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்பட்ட பிரிவிடல் வழக்கொன்றுக்கான திறத்தவரொருவராக ஆக்கப் பட்டுள்ளார் அல்லது ஆக்கப்படவில்லை என்ற நிகழ்வைப் பொருட்படுத்தாது பாதிக்கப்படா திருத்தல் வேண்டும்.

(4) (அ) விடயத்துக்கேற்ப (318 ஆம் அத்தியாய மான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கோயில் ஒன்று தொடர்பாக நியமிக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் அல்லது (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் விலக்களிக்கப்பட்ட

கோயிலொன்றின் விகாராதிபதியொருவர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் தொடுக்கப்படும் பிரிவிடல் வழக்குக்கான திறத்தவரொருவராகவிருப்பதற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(ஆ) விடயத்துக்கேற்ப அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது விகாராதிபதி, இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்கின்றவிடத்து, நீதிமன்றமானது அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரை அல்லது விகாராதிபதியை அத்தகைய வழக்குக்கு திறத்தவரொருவராக ஆக்குதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

"(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்றும் அவ்வறிவித்தலின் மொழிபெயர்ப்பொன்றின் பிரதியொன்றும் எந்த கிராம அலுவலருக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்றதோ அந்த கிராம அலுவலர் ஒவ்வொருவரும், விடயத்துக்கேற்ப காணி அல்லது காணிகள் பற்றிய அட்டவணை உட்பட, அவ்வறிவித்தலின் உள்ளீடுகளை, அவரது அலுவலகத்தில் அல்லது அவரது அலுவலகத்துக்கு அருகாமையில் உள்ள துலாம்பரமான ஓர் இடத்தில் முப்பது நாட்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையொன்றில் வெளிக்காட்டிவைக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அப்பொருள்பட பொருளள

வில் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) கிராம அலுவலர், விடயத்துக்கேற்ப காணி அல்லது காணிகள் பற்றிய அட்டவணை உட்பட, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலின் உள்ளீடுகளை -

(அ) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான முறைகளில் விடயத்துக் கேற்ப காணியில் அல்லது காணிகளில் துலாம்பரமான நிலையொன்றில் பதாகை யொன்றில் வெளிக்காட்டிவைக்கப் படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப அத்தகைய காணியிலும் அல்லது அத்தகைய காணிகள் ஒவ்வொன் றிலும் அத்தகைய காணிக்கும் அல்லது அத்தகைய காணிகள் ஒவ்வொன்றுக்கும் அருகாமையில் உள்ள ஏதேனும் பொது இடத்திலும் ஒலிபெருக்கியொன்றைப் பயன் படுத்திச் செய்யப்பட்ட பகிரங்க அறிவித்தல் என்ற வகையாக வாய்மொழி மூலமாக பிரகடனப்படுத்தப்படுவதனைச் செய்வித் தலும் வேண்டும்,

அத்துடன் அப்பொருள்பட பொருளளவில் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான அறிவித்தலொன்றை நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) இப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் செய்யப்பட்ட வெளியீட்டுக்கான ஆகுசெலவு முதற்கண் வழக்காளியினால் பொறுக் கப்படுதல் வேண்டும் என்பதுடன் விகிதாசாரமாக அறவிடப்படக்கூடியதாதலும் வேண்டும். கிராம அலுவலர், இப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கைகளு டன் சேர்த்து இப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட வெளியீடுக ளின் நிறைவேற்றுகையை உறுதிப்படுத்தி அத்தகைய அறிவித்தலைப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் நீதிமன்றத்துக்கு சத்தியக்கடதாசி யொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) (அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நில அளவையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஆணையானது, பொருளளவில் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் வழக்காளியின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியினால் உண்மையான பிரதியொன்றாக சான்றுப்படுத்தப்பட்ட பிராதின் பிரதியொன்று அதனுடன் இணைக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றமானது, (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப் பட்ட ஆணையை நிறைவேற்றுவதில் நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை 18 ஆம் பிரிவின்கீழ் அதற்கு அனுப்பப்பட்டதன்மேல், அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது வழக்குக்கான எவரேனும் திறத்தவரின் வேண்டுத லின் பேரில் -

(i) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணையின்கீழ் நில அளவையிடப்பட்ட காணியின் ஏதேனும் பெரிதான

அல்லது சிறியதான பாகத்தை நில அளவையிடுவதற்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நில அளவையாளருக்கு அல்லது எந்த நில அளவையாளரின் பெயர் 73 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் நிரலில் குறித்துரைக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் வேறு நில அளவையாளருக்கு அதிகாரமளித்து; அல்லது

(ii) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணையின்கீழ் நில அளவையிடப்பட்ட காணியை மீள் நில அளவையிடுவதற்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நில அளவையாளர் மற்றும் 73 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் நிரலில் பெயர் குறித்துரைக்கப்படுகின்ற நில அளவையாளர் தவிர்ந்த எவரேனும் நில அளவையாளருக்கு அதிகாரமளித்து,

மேலதிக ஆணையொன்றை வழங்குவதற்கு கட்டளையிடலாம் என்பதுடன் நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணையை நிறைவேற்றுவதில் தயாரிக்கப்பட்ட வரைபடத்தின்மீது மேலதிக ஆணையின்கீழ் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை மேற்பொருத்துவதற்கு அல்லது வழக்கிலான தீர்ப்பை அளிப்பதற்கு அவசியமான வேறு ஏதேனும் ஒத்த கருமத்தை நிறைவேற்றுவதற்கு மேலதிக ஆணையை நிறைவேற்றுகின்ற நில அளவையாளரையும் பணிக்கலாம்.

(இ) (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மேலதிக ஆணையை நிறைவேற்றுவதில், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (1), (3), (4), (5) மற்றும் (6) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் மற்றும் 17 ஆம் மற்றும் 18 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், அது தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''பறையறைவித்ததன் பின்னர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒலிபெருக்கியொன்றைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பகிரங்க அறிவித்தல் என்ற வகையாக'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பிரிவிடல் வழக்கிற்குக் கட்சிக்காரராக இருக்கும் ஒவ்வொருவரும்," என்பதிலிருந்து "நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் அல்லது கோப்பிடுவித்தல் வேண்டும்." என்பது வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"பிரிவிடல் வழக்கொன்றிற்கான ஒவ்வொரு திறத்தவரும், வழக்கின் விளக்கத்துக்காக முதலாவது நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் எந்த ஆவணங்களின்மீது அந்தக் காணியின் அல்லது காணியில் அவரது உரிமையை, பங்கினை அல்லது அக்கறையை எண்பிப்பதற்கு அவர் நம்பியிருக்கின்றாரோ அந்த ஆவணங்களின் ஒரு நிரலை அத்தகைய ஆவணங்களின் உள்ளீடுகள் பற்றிய ஒரு பொழிப்புடன் சேர்த்து நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் அல்லது கோப்பிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். திறத்தவரொருவர் விளக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட முதலாவது தேதியின் பின்னர் இடையீடு செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய திறத்தவர் அத்தகைய இடையீட்டிலிருந்து முப்பது நாட்களினுள் ஆவணங்களின் நிரலொன்றை கோப்பிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(3) அந்தக் காணி அல்லது அதன் ஏதேனும் பாகம் பிரிவிடப்பட வேண்டும் என நீதிமன்றம் முடிபுசெய்கின்றவிடத்து, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான ஆணை, நீதிமன்றமானது அதனை, எந்த நில அளவையாளரின் பெயர் 73 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிரலில் குறித்துரைக்கப்படுகின்றதோ அந்த வேறு எவரேனும் நில அளவையாளருக்கு அல்லது நீதிமன்றம் தகுதியானதெனக் கருதுகின்றவிடத்து, 73 ஆம் பிரிவில் முரணாக எது

எவ்வாறிருப்பினும், 26 ஆம் பிரிவின் கீழ் பதியப்பட்ட வழக்கிடைத்தீர்வையினால் ஏதேனும் உரிமை அளிக்கப் பட்டுள்ள எல்லா திறத்தவர்களும் உடன்பட்டுக்கொள்வதன் மேல் வேறு எவரேனும் நில அளவையாளருக்கு வழங்குவதற்கு முடிபுசெய்தாலொழிய 17 ஆம் பிரிவின்கீழ் பூர்வாங்க நில அளவையைச்செய்த நில அளவையாளருக்கு வழங்கப் படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "பறையறைவித்ததன் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒலிபெருக்கியொன்றைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பகிரங்க அறிவித்தல் என்ற வகையாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"மேன்முறையீடு செய்யும் அனுமதிக்கான விண்ணப்பம்

36அ. முப்பத்தாறாம் பிரிவின் கீழ் நீதிமன்றத் தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் அதிருப்தி யுற்ற எவரேனும் ஆள், அத்தகைய கட்டளைக்கு எதிராக (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 754 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறை யீடு செய்யும் அனுமதிக்கான விண்ணப்பமொன் றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45அ என்னும் பிரிவைத் திருத்துதல

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "36அ அல்லது 45அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "36 ஆம் மற்றும் 45 ஆம் பிரிவுகளின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் “விரும்பிய நேரத்தில் வெளியேற்றும் குத்தகை அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான குத்தகை என்பன தவிர்ந்த,” என்னும் சொற்களுக்குப் பதிலாக “விரும்பிய நேரத்தில் வெளியேற்றும் குத்தகை அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான குத்தகை அல்லது (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச்சட்டத்தின் கீழ் வலுவுறுத்தப்படற்பாலதான கோயிலொன்றின் உரிமைகள் என்பன தவிர்ந்த,” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> “(ஈ) 15 ஆம் பிரிவின்கீழ் பதாகையை காட்சிப்படுத்துவதிலும் செய்யப்பட்ட பிரகடனத்துக்கும் உறப்பட்ட ஆகுசெலவு தொகை மற்றும் 17 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தில் உறப்பட்ட ஆகுசெலவு தொகை;”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ‘‘காணி’’ என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் “என்று பொருளாகும்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக “என்று பொருளாகும் என்பதுடன் அது, 2அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான கோயில் காணியொன்றின் பரவேணிப் பங்கையும் உள்ளடக்குதல் வேண்டும்;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) “பிரிவிடல் வழக்கு” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

> “ ‘‘பரவேணி நிலகாரயா’’ என்பது, அது கோயில் ஒன்றுடன் தொடர்புபட்ட அளவுக்கு (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச்

சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அதற்கு குறித்துரைக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பரவேணி பங்கு" என்பது, (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான எந்த சேவையின் புரிகை அல்லது கடமைகளை அளித்தல் தொடர்பில் (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழான சேவைகளுக்குப் பதிலாக மாற்றீடுசெய்யப்பட்ட வருமதிகளுக்கான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் சேவையின் புரிகை அல்லது எவையேனும் கடமைகளை அளித்தலுக்கு அமைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியின் பாகமொன்றை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் அது கோயில் ஒன்றுடன் தொடர்புபட்ட அளவுக்கு (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளை உள்ளடக்குதலும் வேண்டும்;";

(3) "நில அளவையாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "என்று பொருளாகும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என்று பொருளாகும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) "நில அளவையாளர்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "கோயில்" என்பது, அத்தகைய கோயில் (467 ஆம் அத்தியாயமான) சேவை வாரமுறை கட்டளைச் சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான

உரிமைகளைக் கொண்டிருக்கும் அளவுக்கு (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

''நம்பிக்கைப்பொறுப்பாளர்'' என்பது (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை, ''கிராம சேவக அலுவலரின் அறிக்கை'' என்னும் தலைப்பைக் கொண்டுள்ள 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்துக் கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்*

(1) '' [பிரிவு 15 (2)]'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''(15 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகள்)'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) ''அணைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களை (மொழிபெயர்ப்புக்களுடன்) எனது அலுவலகத்திலுள்ள அறிவித்தற் பலகையில் 19......... ஆம் ஆண்டு ...... மாதம் ......... ஆந் நாளிலிருந்து 19 ......... ஆம் ஆண்டு ........ மாதம் .......... ஆந் நாள்வரை வெளிக்காட்டி வைத்துள்ளேன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் -

''எனது அலுவலகத்திலுள்ள துலாம்பரமான ஓர் இடத்திலும் காணியில் உள்ள துலாம்பரமான ஓர் இடத்திலும் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையொன்றில் காணியின் அட்டவணை உட்பட

அறிவித்தலின் உள்ளீடுகளை 19 ........ ஆம் ஆண்டு ......... மாதம் ............ ஆந் நாளிலிருந்து 19 .......... ஆம் ஆண்டு ............. மாதம் .......... ஆந் நாள்வரை வெளிக்காட்டி வைத்துள்ளேன் என்பதுடன் அத்தகைய காணியிலும் அத்தகைய காணிக்கு அருகாமையில் உள்ள ஏதேனும் பொது இடத்திலும் ஒலிபெருக்கியொன்றைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பகிரங்க அறிவித்தல் என்ற வகையாக வாய்மொழி மூலமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளேன்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்